21st November 1963]

MR. SPEAKER : Let the hon. Member put a supplementary question relating to the main question.

பார்லிமெண்டில் என்ன சொன்னார்கள் என்பதைப்பற்றிக் கவலையில்லை. இப்போது இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு இன்பர்மேஷன் கிடைப்பதற்கு ஏதாவது வழியிருக்கிறது என்றால் அதைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : பார்லிமெண்டில் இவ்விதம் சொல்லி யிருக்கிறார்கள் . . .

MR. SPEAKER : Question No. 357.

மாதர் சங்க கட்டிடம் (சத்தியமங்கலம்)

*** 357 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) செஞ்சி தாலுகா சத்தியமங்கலம் கிராமத்தில் மாதர் சங்கத்திற்காகக் கட்டிடம் கட்ட ஆரம்பித்து நின்றிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன் காரணமென்ன?

(இ) 1963-64 நிதி ஆண்டிலாவது அதைக் கட்டி முடிக்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) தெரியும். அக் கட்டிடம் தனியார் ஒருவரின் நிதி ஆதார வசதிகளைக் கொண்டே, அவரால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

(இ) ஆதலால், இக்கேள்வி எழுவதற்கு இடமில்லை.

திரு. கு. கோபால கவுண்டர் : சத்தியமங்கலம் கிராமம் ஒரு குக்கிராமமாக இருக்கின்ற காரணத்தினாலும், இங்கு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ், உயர்நிலைப் பள்ளி, பிரைமரி ஹெல்த் சென்டர், போலீஸ் நிலையம் இவைகளெல்லாம் இருக்கின்ற காரணத்தால், இந்த இடங்களுக்கு வருகின்ற அதிகாரிகள் தங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இதற்கான கட்டிடத்தை சீக்கிரத்திலேயே கட்டிக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தக் கேள்வி மாதர் சங்கத்திற்காகக் கட்டப்படும் கட்டிடத்தைப் பற்றியது. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது போல் டூரிஸ்ட் ஹோம் பற்றியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கக்குவான் தடுப்பு ஊசி

*** 358 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிறு குழந்தைகளுக்கு கக்குவான் இருமல் நோய் வாராமல் தடுக்கும் தடுப்பு ஊசிகள் இப்போது போடப்பட்டு வருகின்றனவா?